# 30

# தேசத்தின்மீது பற்றுக்கொள்ளல்

இஸ்லாம் இயற்கை மார்க்கமாகும். அது மனிதனது இயல்புகளையும் மனித சுபாவத்தையும் கவனத்திற்கொள்கின்றது.

தேசப்பற்று, தேசிய உணர்வு என்பவை இயல்பானவை. எந்த மனிதனும் தனது இனத்தின்பால், மொழியின்பால், சமூகத்தின்பால், தான் வாழும் பூமியின்பால், வாழும் நாட்டின்பால் ஈடுபாடு கொள்வது யதார்த்தமானதாகும். பின்வரும் அல்குர்ஆன் வசனம் இதுபற்றி சிறப்பாக எடுத்தியம்பியுள்ளது.

''மனிதர்களே, உங்களை நாம் ஓர் ஆணிலிருந்தும் ஒரு பெண்ணிலிருந்தும் படைத்தோம். நீங்கள் ஒருவரை ஒருவர் அறிந்து கொள்ள வேண்டும் என்பதற்காக உங்களைநாங்கள்பலஇனங்களாகவும்கோத்திரங்களாகவும்அமைத்திருக்கின்றோம்.'' (49: 13)



நாடு, இனம், மொழி, பிரதேசம் அனைத்தையும் கடந்த நிலையில் ஓர் ஆண், ஒரு பெண்ணிலிருந்து படைக்கப்பட்டுள்ளமை பற்றி அல்குர்ஆன் குறிப்பிடுவது கவனிக்கத்தக்கது.

பிறந்த மண்ணையும் தேசத்தையும் நேசிப்பது மனிதனிடமுள்ள ஓர் இயற்கையான உணர்வாகும். உயர்வான இந்த மானிடப் பண்பை நாம் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மற்றும் நபித் தோழர்கள் வாழ்வில் கண்டுகொள்ளலாம்.

மக்காவாசிகளின் கொடுமைகளால் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் இடம்பெயர நிர்ப்பந்திக்கப்பட்டபோது அவர்களின் உள்ளத்திலிருந்து வெளிவந்த வார்த்தைகள், தான் பிறந்து வளர்ந்த மக்கா மண்ணின் மீதுள்ள பற்றை சிறப்பாக எடுத்துக்காட்டுகின்றன. மக்கா நகரை விழித்து ''மக்காவே நீ உலகிலேயே எனக்கு மிகவும் விருப்பமான பூமி. அல்லாஹ்விடத்தில் மிகவும் கண்ணியமான தேசம். உன் சமூகம் என்னை விரட்டியிருக்காவிட்டால் நான் உன்னை விட்டுச் சென்றிருக்க மாட்டேன்'' (முஸ்னத் அபூ யஃலா) என கண்ணீர் மல்கக் கூறினார்கள்.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு ஆரம்ப வஹி அருளப்பட்ட சமயத்தில் இது தொடர்பான விளக்கத்தைப் பெறுவதற்காக கதீஜா ரழியல்லாஹு அன்ஹா அவர்கள், நபிஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை வரகா பின் நௌபலிடம் அழைத்துச் சென்றார்கள். அப்போது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மக்காவை விட்டும் விரட்டப்படுவார்கள் என வரகத் பின் நௌபல் எதிர்வு கூறியதும் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களால் அதனை நம்ப முடியவில்லை. மிகுந்த ஆச்சரியத்தில் ''நான் பிறந்து வளர்ந்து, ஒன்றாகக் கூடிப் பழகி வாழ்ந்த இந்த மண்ணிலிருந்து அவர்கள் என்னை வெளியேற்றுவார்களா?'' என்று கேட்டார்கள். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தாம் பிறந்து வளர்ந்த பூமி மீது கொண்டிருந்த பற்றை இது பறைசாற்றுகிறது.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மதீனாவுக்கு ஹிஜ்ரத் சென்ற பின்னர் கூட தனது பிறந்த தேசத்தை நினைத்துக் கவலைப் பட்டிருக்கிறார்கள். ''யா அல்லாஹ் நீ எங்களுக்கு மக்காவை நேசத்திற்குரிய பூமியாக மாற்றியது போன்று, மதீனாவையும் மாற்றித் தருவாயாக அல்லது மக்காவை விட நேசத்திற்குரிய பூமியாக மதீனாவை மாற்றித் தருவாயாக'' (புஹாரி) எனப் பிரார்த்தித்தார்கள்.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஹிஜ்ரத் சென்று சில நாட்களுக்குப் பின்பு உஸைல் அல் கிப்பாரி ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் மதீனாவுக்கு வந்த சமயம் அன்னாரை விழித்து ''மக்கா நகரம் எப்படி இருக்கிறது?'' என்று கேட்டார்கள். உஸைல் கிப்பாரி ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் புனித மக்காவின் பசுமைகளையும் மழை பொழிந்து வெள்ளம் பாய்ந்தோடிய பள்ளத்தாக்குகளையும் செழிப்பாக வளர்ந்துள்ள மக்கத்து செடி கொடிகளையும் வர்ணிக்க ஆரம்பித்தபோது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், ''போதும் போதும், மீண்டும் அந்த மக்கா பற்றிக் கூறி எமது உள்ளங்களை கவலையில் ஆழ்த்திட வேண்டாம்'' என்றார்கள். (உஸுதுல் காபா, அல்இஸாபா)

*பிலால் ரழியல்லாஹூ அன்ஹூ அவர்கள் மதீனாவில் சுகயீனமுற்றிருந்த ஒரு சமயம் மக்காவை நினைத்து கண்ணீர் வடித்தார்கள். ''இத்கிர் மற்றும் ஜலீல் என்ற பசுமையான புற்றரைகள் என்னைச் சூழ இருக்க மக்காவின் அந்தப் பள்ளத்தாக்கில் ஓர் இரவேனும் தூங்கும் நாள் எனக்கு வரக் கூடாதா? மஜன்னாவின் (மக்காவின் ஒரு இடம்) நீரைப் பருகும் வாய்ப்பு ஒரு நாளேனும் கிட்டாதா? ஷாமா, துபைல் என்ற இரு மலைகளும் எனக்குத் தென்படக் கூடாதா?'' என பிலால் ரழியல்லாஹூ அன்ஹூ அவர்கள் குறிப்பிட்டமை தனது சொந்த ஊரின் மீது அவர் கொண்டிருந்த பற்றை வெளிப்படுத்துவதாக உள்ளது. (ஸஹீஹுல் புஹாரி)*

*''தேசப்பற்றும் தேசிய உணர்வும் இருப்பதால் தான் நாடுகள் வளமாகின்றன'' என உமர் ரழியல்லாஹூ அன்ஹூ அவர்கள் கூறியுள்ளமையும் கவனிக்கத்தக்கதாகும்.*

*நாடுகாண் பயணி இப்னு பதூதா அவர்கள் சுற்றுலாவுக்காக தாய் நாட்டை விட்டும் வெளியேறிய நிகழ்வு பற்றி குறிப்பிடும்போது, ''சகல நாடுகளையும் விட என்னிடத்தில் சிறப்புப் பொருந்திய என் நேசத்திற்குரிய தாய்நாட்டின் பிரிவை நினைத்து கவலை கொள்வதனால் எனக்கு மரணம் ஏற்பட்டு விடுமோ என எண்ணினேன்'' எனக் குறிப்பிட்டார்கள்.*

*நாட்டுப்பற்று என்பது ஒரு மனிதன் தான் பிறந்த பூமியை விரும்புவதுடன் மாத்திரம் சுருங்கிவிட மாட்டாது. அதற்கு அப்பால் அவன் தன் நாட்டு மக்களை நேசிப்பவனாக இருப்பான். நாட்டு மக்களின் நலன் கருதி அவர்களோடு இணக்கமாக வாழ்வதும் அவர்களுக்காக உழைப்பதும்தான் உண்மையான தேசப்பற்றாகும். தேசப்பற்றுள்ள ஒரு குடிமகன் நாட்டின் சுகாதாரம், கல்வி, கலாசாரம் போன்றவற்றின் வளர்ச்சிக்கு தன்னலம் கருதாது உழைப்பதும் ஒத்துழைப்புக்களை நல்குவதும் பாராட்டத் தக்கவையாகும்.*

*நாடு ஆபத்துக்கோ வறுமைக்கோ பஞ்சத்துக்கோ அநியாயத்துக்கோ உள்ளாகும் போது நாட்டை விட்டு ஓடாமல் உயிரைத் துச்சமாகக் கருதி அங்கேயே நிலைத்து நின்று நாட்டின் விடுதலைக்காகப் போராடுவதே உண்மையான நாட்டுப் பற்றாகும்.*

*நாட்டுப் பற்றும் இன உணர்வும் மொழி ஈடுபாடும் மனித நேயத்துக்கு முரணாகவோ, சகோதரத்துவத்துக்கோ நீதியை நிலைநாட்டுவதற்கோ தடையாக அமையக் கூடாது என்பதிலும் இஸ்லாம் கவனம் செலுத்துகின்றது.*

**''முஃமின்களே! நியாயத்தை நிலைநாட்டுவதற்காக அல்லாஹ்வுக்கு நீங்கள் உறுதியான சாட்சியாக இருங்கள். எந்த ஒரு கூட்டத்தார் மீதும் நீங்கள் கொண்டுள்ள வெறுப்பு நீதி செய்யாமலிருக்க உங்களைத் தூண்ட வேண்டாம். நீதி செய்யுங்கள். இதுவே (தக்வாவுக்கு) - பயபக்திக்கு மிக நெருக்கமாகும். அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள். நிச்சயமாக அல்லாஹ் நீங்கள் செய்பவற்றை(யெல்லாம் நன்கு) அறிந்தவனாக இருக்கின்றான்.'' (5: 08)**

*இவற்றுடன் மனிதர்களை நேசிப்பதை, நாட்டு மக்களுடன் அன்பு பாராட்டுவதை இஸ்லாம் இபாதத்தாகக் கற்பிக்கிறது.*

*நபி ஸல்லல்லாஹுு அலைஹி வஸல்லம் அவர்கள் பின்வருமாறு குறிப்பிட்டார்கள்.*

*''மண்ணிலுள்ள மனிதர்களை நேசித்தால் விண்ணில் உள்ள இறைவன் உங்களை நேசிப்பான்,'' (திர்மிதி)*

*''மனிதர்கள் மீது கருணை காட்டாதவர்களுக்கு இறைவன் கருணை காட்ட மாட்டான்'' (புஹாரி)*

*இதன்படி இனம், மொழி, நிறம் போன்றவற்றால் மக்கள் வேறுபட்டாலும் நாடு என்ற வகையில் இணைந்து செயற்படுவது இன்றியமையாததாகும்.*

***எனவே பரஸ்பர அன்பு, பரஸ்பர புரிந்துணர்வு, சகிப்புத்தன்மை, பொது நலன் பேணல், விட்டுக்கொடுத்தல் போன்றவற்றை அணிகலன்களாகக் கொண்டு நாட்டுப் பற்றுடன் நாட்டு முன்னேற்றத்தில் பங்களிப்புச் செய்ய உறுதி கொள்வோம். தேசத்தின் மீது பற்றுக் கொள்வோம். தேசத்தின் வளர்ச்சிக்காக உழைப்போம்.***

**பயிற்சி**

1. *நபி ஸல்லல்லாஹுு அலைஹி வஸல்லம் அவர்களின் நாட்டுப்பற்றை வெளிப்படுத்தும் சம்பவம் ஒன்றைக் குறிப்பிடுக.*
2. *நபித்தோழர்களின் நாட்டுப்பற்றை வெளிப்படுத்தும் சம்பவம் ஒன்றைத் தருக.*
3. *ஒரு மனிதன் தான் வாழும் நாட்டின்மீது பற்றுக்கொள்வது யதார்த்தமானது என்பதைச் சுட்டிக்காட்டும் அல் குர்ஆன் வசனம் ஒன்றை எழுதுக.*
4. *நாம் இலங்கையர் என்ற வகையில் எமது தேசத்தின் மீது பற்றை எவ்வெவ் வழிமுறைகள் மூலம் வெளிப்படுத்தலாம் என்பதைக் கலந்துரையாடி எழுதுங்கள்.*